# தமிழர் சமயம்


விலை ரூ.10/- | ஆண்டுச் சந்தா ரூ.100/–

மலர் 2 | ஜனவரி 2011 | இதழ் 3

Volume 2 | January 2011 | Issue 3


## தமிழர் சமயமும், தமிழர் ஆன்மவியலும்

**6 மாத - பயிற்சி வகுப்புகள்**



**மத, இன பயங்கரவாதத்திற்கு அறிவியல் நோக்கில் தீர்வு காண நடத்தப்பட்ட கலந்துரையாடல்**

**தமிழர் சமய உலக இரண்டாம் மாநாடு**



**உலகின் பிற மொழிகளுக்கு அடிப்படை தமிழா?**

**பயிற்சி கொடுக்கப்பட்ட தமிழின அர்ச்சகர்கள் வெளியே நிறுத்தப்பட்டது ஏன்???**

**- சில கேள்வி பதில்கள்**



# மத, இன பயங்கரவாதத்திற்கு அறிவியல் நோக்கில் தீர்வு காண நடத்தப்பட்ட கலந்துரையாடல்

மத, இன பயங்கரவாதத்திற்கு அறிவியல் நோக்கில் தீர்வு காணும் கலந்துரையாடல் 21.12.2010 செவ்வாய் மாலை எழும்பூரில் உள்ள ஹோட்டல் ஃபோர்டெல்−−ல் உலகத் தமிழர் ஆன்மவியல் இயக்கம் நடத்தியது.

சீர்காழி சிவ. சந்திரசேகரன் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்திட, பேராசிரியர் முனைவர் க. இராமசாமி அவர்கள் (பொறுப்பு அலுவலர், செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்) தலைமை வகித்தார். பேராசிரியர் முனைவர் தனராஜ் அவர்கள் முன்னிலை வகித்தார். 'தமிழர் ஆன்மவியல்' என்னும் மையப் பொருளில் பேராசிரியர் முனைவர் மு. தெய்வநாயகம் (நிறுவனர், உலகத் தமிழர் ஆன்மவியல் இயக்கம்) அவர்கள் விளக்க உரை வழங்கினார். வந்திருந்த அறிஞர் பெருமக்கள் கலந்துரையாட−ல் கலந்து கொண்டு தங்கள் கருத்துகளையும் ஆலோசனைகளையும் வழங்கினர். முனைவர் தேவகலா நன்றியுரை வழங்கிட, கலைந்துரையாடல் இனிதே நிறைவுபெற்றது.

## கலந்துரையாடலுக்கு அடிப்படையாக எடுத்துக் கொள்ளப்பட்ட மூன்று குறிப்புகள்

பின்வரும் 3 குறிப்புகள் கலந்துரையாடலுக்கு அடிப்படையாக எடுத்துக் கொள்ளப்பட்டன.

உலகில் முரண்பட்டு நிற்கும் ஆன்மீக நம்பிக்கைகளின் அடிப்படையில் மத, இன பயங்கரவாதங்கள் பெருகியுள்ள இக்காலத்திற்கு இன்றியமையாதது உலக அமைதி.

1. *"அறிவியலையும் ஆன்மீகத்தையும் இணைத்து அறிவியல் நோக்கில் ஆராய வேண்டியது மத, இன பயங்கரவாதங்கள் பெருகியுள்ள இந்தக் காலத்திற்கு இன்றியமையாததாகிறது."*
2. *'உலக அமைதிக்கு வழிகாட்டியாக நின்று உலக மனிதர்களையும், உலக மதங்களையும் ஒன்றிணைக்கும் **"தமிழர் சமயமும் தமிழர் ஆன்மவியலும்"***

   *என்னும் தலைப்பில் பயிற்சி வகுப்புகள் 06-01-2011 முதல் தொடங்குகின்றன."*
3. *"நம்பிக்கைகளைத் தாண்டி அறிவியல் நோக்கில் சிந்தித்துக் கேள்விகள் கேட்கக் கூடிய அறிவியல் அறிஞர்களின் துணை தேவை."*

**கலந்துரையாடலுக்கு இந்த மூன்று குறிப்புகளும் அடிப்படையாக எடுத்துக் கொள்ளப்பட்டன.**

## மாநாடு நடத்த ஆலோசனை

கலந்துரையாட−ல், மத, இன பயங்கரவாதங்களுக்குத் தீர்வு காண அறிவியலையும் ஆன்மீகத்தையும் இணைத்து அறிவியல் நோக்கில் ஆராய வேண்டியதன் இன்றியமையாமையும், 'உலக அமைதிக்கு வழிகாட்டியாக, "தமிழர் சமயமும் தமிழர் ஆன்மவியலும்" விளங்குகின்ற பாங்கு குறித்தும் அலசப்பட்டன. ஆய்வு அடிப்படையில் விவாதிக்கப்பட்டன. இறுதியில் இக் கருத்துகளை மையமாக வைத்து மாநாடு நடத்த வேண்டுமென அறிஞர் பெருமக்கள் ஆலோசனை வழங்கினர். மாநாடு நடத்துவது குறித்து பேராசிரியர் இராமசாமி அவர்களும் பேராசிரியர் தெய்வநாயகம் அவர்களும் எடுத்துக் கூறினர்.

– *தெ. கலா*



# தமிழர் சமய உலக இரண்டாம் மாநாடு

**காலம் : 2011 ஆகஸ்டு 13–15** **இடம் : சென்னை**

**மையப்பொருள் :**

## "ஆறாவது அறிவு"

**மாநாட்டில் விடை காண வேண்டிய கேள்விகள்**

1. ஐந்து அறிவுக்குரிய உறுப்புகளைச் சுட்டிக் காட்டுவது போன்று ஆறாவது அறிவுக்குரிய உறுப்பைச் சுட்டிக் காட்ட இயலவில்லையே. ஏன்?
2. மனிதனுக்கு மட்டுமே இருப்பதாகக் கூறப்படும் "ஆறாவது அறிவு" என்னும் ஒன்று உண்மையில் இருக்கின்றதா?
3. "Science without Religion is Lame
   Religion without Science is Blind"
   என்னும் ஐன்ஸ்டீன் கூற்று, ஆறாவது அறிவைப் பற்றிய ஆய்வுக்குப் பொருந்துமா?
4. ஆறாவது அறிவைப் பற்றி அறிவியல் கூறுவது என்ன?
5. ஆறாவது அறிவைப் பற்றி ஆன்மீகம் கூறுவது என்ன?
6. ஆறாவது அறிவை அடிப்படையாகக் கொண்டு, பண்டைத் தமிழ் இலக்கணம் கூறும் உயர்திணை, அஃறிணை என்னும் பிரிவு சரியானதா?
7. உலக மொழிகளில் தமிழில் மட்டுமே இருக்கும் பொருள் இலக்கணத்தின் ஒரு பகுதியாகிய அகப் பொருள் இலக்கணத்தில் ஆறாவது அறிவு விளக்கப்படுகிறதா?
8. ஆறாவது அறிவின் விளக்கம் என்ன?
9. ஆறாவது அறிவைப் பற்றிய தெளிவினால் உலகம் அடையும் நன்மைகள் யாவை?

குறிப்பு:
1. தமிழ் இலக்கணம் தொடர்பான ஆய்வாக இருப்பதால் மாநாடு தமிழ் மொழியில் நடைபெறும்.
2. தமிழ் தெரியாத கட்டுரையாளர்கள் தக்க தமிழ் மொழிபெயர்ப்புடன் ஆங்கிலத்தில் கட்டுரை வழங்கலாம்.

உலக அமைதிக்கு வழி காட்டியாக நின்று
உலக மனிதர்களையும், உலக மதங்களையும் ஒன்றிணைக்கும்

# தமிழர் சமயமும், தமிழர் ஆன்மவியலும்

## 6 மாத - பயிற்சி வகுப்புகள்

**2011 ஜனவரி 6 முதல் தொடங்குகின்றன. ஒவ்வொரு செவ்வாய், வியாழன்**

**மாலை**

**6.30 முதல்**
**8.30 வரை**

### தமிழர் சமயம் இரண்டு பகுதிகளை உடையது

1. முதல் பகுதி: ஆதாம் முதல் தோமா வரை – இதை விளக்குவது பைபிள்.

2. இரண்டாம் பகுதி: தோமா முதல் மெய்கண்டார் வரை – இதை விளக்குவது சைவ, வைணவ நூல்கள்.

### இந்த இரண்டு பகுதிகளின் வரலாற்று வளர்ச்சி

1. கடவுள் "ஆதன் தந்தை" என்னும் பெயரால் சங்ககாலத் தமிழ் இலக்கியத்தில் குறிக்கப்படுகின்றார்.

2. **ஆதாமுக்குத்** தமிழகத்தில் கோவில் இருந்ததை,**"பிறவா யாக்கைப் பெரியோன் கோவில்"** என்று சிலப்பதிகாரம் கூறுகிறது.

3. ஆதாமின் பிள்ளைகளான **காயீன், ஆபேல்** கல்லறைகள் இவை என இராமேஸ்வரத்தில் இன்றும் சுட்டிக் காட்டப்படுகின்றன.

4. சிநேயாருக்குக் கிழக்கே இருந்த சிந்துவெளித் தமிழர்கள், இமய மலையைக் கடந்து சுமேரிய நாகரிகத்தை உருவாக்கியதைக் கூறுவதன் வழி, உலகின் முதல் மொழி தமிழ் மொழி என்பதையும், உலகின் முதல் இனம் **தமிழ் இனம்** என்பதையும் பைபிளின் தொடக்க நூலாகிய ஆதியாகமம் 11ஆம் அதிகாரத்தின் முதல் இரண்டு வசனங்கள் விளக்கிக் கொண்டிருக்கின்றன.

5. பைபிளின் பழைய ஏற்பாட்டிலுள்ள பெத்தேல், மிஸ்பா, சீனாய், கில்கால், சீகேம், எபனேசர் ஆகிய ஆறு இடங்களில் நடைபெற்ற வழிபாடுகள், **"சிந்துவெளித் தமிழர்களின் சிவ—ங்க வழிபாட்டின் விரிவாக்கமே பைபிள்"** என்பதை விளக்குகின்றன.

   ( சிவம் = அன்பு, —ங்கம் = அடையாளம்
   சிவ—ங்கம் = கடவுள், மனிதர் மீது காட்டிய அன்பின் அடையாளம் )

6. பைபிளின் பழைய ஏற்பாடு கூறும் சிவ—ங்க வழிபாட்டி—ருந்து, கடவுளை, தந்தை—பரிசுத்த ஆவி—மகன் என்று மூவொருவராகப் பார்க்கும் பார்வையைப் புதிய ஏற்பாடு விளக்கிக் கொண்டிருக்கிறது.

7. இயேசு கிறிஸ்துவின் பன்னிரு சீடர்களில் ஒருவரான **புனித தோமா** தமிழகத்தில் ஆற்றிய நற்செய்திப் பணியின் பயனாக, புதிய ஏற்பாடு கூறும் தந்தை—பரிசுத்த ஆவி—மகன் என்பதை, அப்பன்—அம்மை—மகன் என்று விளக்கி, பரிசுத்த ஆவியை அம்மையாகிய பெண்ணாகப் பார்க்கும் பார்வையில் சைவ சமயம் எழுந்தது.

8. இதை எதிர்த்து, பரிசுத்த ஆவியின் ஆண் தன்மை, மகனாகிய இயேசு கிறிஸ்துவின் பிறப்பில் விளங்குவதை விளக்கி சிவன்—விஷ்ணு—பிரமன் என்னும் மூவொருமைக் கோட்பாட்டில் வைணவம் எழுந்தது.

   சைவத்தில் பிள்ளையார் விளக்கமும் வைணவத்தில் ஐயப்பன் விளக்கமும் பின்னர் இணைந்தன.

9. சிவன், சக்தி, குமரன், பிள்ளையார் என்று சைவத்திலும், சிவன்—விஷ்ணு—பிரமன்—ஐயப்பன் என்று வைணவத்திலும் சிவக்குடும்பத்தின் 7 பெயர்கள் தனித்தனியாகக் கூறப்பட்ட போதிலும், அவை ஒரே கடவுளையே விளக்குகின்றன என்னும் அடிப்படை உண்மையை, தமிழர் ஆன்மவியலை விளக்கும் **மெய்கண்டாரின்** நூலாகிய சிவஞானபோதம் உலகிற்கு விளக்கிக் கொண்டிருக்கிறது.

10. உலக சமயங்கள் அனைத்தும் கூறும் 1. வழிபாடு 2. ஆன்மீகம் 3. சமயம் ஆகிய மூன்றிலுமிருந்து வளர்ந்து, இந்த மூன்றையும் உள்ளடக்கிய நான்காவதாகிய தமிழர் ஆன்மவியல் நூலாக. "சிவஞானபோதம்" விளங்கிக் கொண்டிருக்கிறது.

**உலக அமைதிக்குத் தமிழரின் பங்கு என்ன?**
**வழிகாட்டுகிறது 'தமிழர் ஆன்மவியல்'.**

11. உலக மனிதர்களையும், உலக மதங்களையும் ஒன்றிணைக்கும் ஆன்மவியல் உலக மொழிகளில் தமிழ் மொழியில் மட்டுமே உருவாகி வளர்ந்து இருக்கிறது.

12. உலகிலுள்ள அனைத்து மதங்களின் படிப் படியான வளர்ச்சியை, **தமிழர் சமய வரலாறு** தெளிவாக உலகிற்கு விளக்கிக் கொண்டிருக்கிறது.

உலக சமயங்கள் அனைத்திற்கும் அடிப்படைக் கூறுகளாக விளங்கும், **உடல், உயிர், ஆன்மா, கடவுள், ஆணவம்** ஆகியவற்றை **அறிவியல் வழியில்** உலகிற்கு விளக்கிக் கொண்டிருப்பது தமிழர் ஆன்மவியல் ஆகும்.

13. உயிர், ஆன்மா, கடவுள் ஆகிய மூன்றையும் அறிய இயலாத டார்வின் கொள்கை, அறிவியலுக்குப் புறம்பானது என்பதைத் தமிழர் ஆன்மவியல் உலகிற்கு அறிவியல் வழியில் நிலைநாட்டிக்காட்டுகிறது.

14. உயிரை அறிந்திருந்தும் ஆறாவது அறிவையுடைய மனிதத்திற்குக் காரணமான ஆன்மாவையும் கடவுளையும் அறியாத நிலையில், மனிதனுக்கும் மாட்டுக்கும் வேறுபாடு தெரியாத, நாத்திக சமயமான சமணம் உருவாக்கிய, போன பிறவி, இந்தப் பிறவி, அடுத்த பிறவி என்பனவற்றை நம்பும் நாத்திகக் கொள்கையான பிறவிச் சுழற்சிக் கொள்கை அறிவியலுக்குப் பொருந்தாத, அதே நேரத்தில் நல்ல நோக்கத்தோடு உருவாக்கப்பட்ட ஓர் அழகான கற்பனை என்பதைத் தமிழர் ஆன்மவியல் அறிவியல் வழியில் உலகிற்கு நிலைநாட்டிக் காட்டுகிறது.

15. இன்று உலகை நடுங்க வைத்துக் கொண்டிருக்கும் மனித நேயத்திற்குப் புறம்பான மத, இனப் பயங்கரவாதங்களுக்குத் தீர்வாக, தமிழர் சமயமும் தமிழர் ஆன்மவியலும் சிறந்து விளங்குவதுடன், உலக மனிதர்களிடையே அன்பும், ஐக்கியமும் வளரத் துணையாக இருக்கின்றன.

இதனால், மேலே கூறப்பட்டுள்ளவற்றை வரலாற்று வழியில் அறிந்து கொண்டு உலகுக்கு அறிவித்து, உலகம் முழுவதும் அமைதியாக வாழத் துணைபுரிய வேண்டிய பிறவிக் கடமை தமிழராகப் பிறந்த ஒவ்வொருவருக்கும் இருக்கிறது. தங்கள் பிறவிக் கடமையை நிறைவேற்ற விரும்பும் அன்பர்கள், எங்களுடன் தொடர்பு கொள்ள வேண்டுகின்றோம்.

ஆறு மாதங்களுக்கும் சேர்த்து மொத்தப் பயிற்சிக் கட்டணம் ரூபாய். 2000/–

## வகுப்புகள் நடத்தப்பட வேண்டிய முறை பற்றி

“கடவுள் இருக்கின்றார்” என்று நம்புவதும் “கடவுள் இல்லை” என்று நம்புவதும் ஆகிய இரண்டு நம்பிக்கைகளும் மூட நம்பிக்கைகளே. நம்பிக்கைகளைத் தாண்டி அறிவியல் நோக்கில் சிந்தித்து அறிவது இன்றியமையாதது.

ஆத்திகமும் நாத்திகமும், ஆத்திக சமயங்களும் நாத்திக சமயங்களும் அறிவியலுக்குப் பொருந்தாத நம்பிக்கையின் அடிப்படையில் இயங்குகின்றன. இதனால் **நம்பிக்கைகளைத்தாண்டி அறிவியல் நோக்கில் சிந்தித்துக் கேள்விகள் கேட்கக் கூடிய அறிவியல் அறிஞர்கள் இந்த வகுப்புகளுக்குத் தேவை.**

"Science without religion is lame
Religion without science is blind’’

என்று கூறியுள்ள அறிவியல் மேதை ஐன்ஸ்டீன் கூற்றுக்கிணங்கவும், தமிழ் இலக்கணம் கூறும் அகப் பொருள் இலக்கணத்திற்கேற்பவும், அறிவியலையும், ஆன்மீகத்தையும் இணைத்து அறிவியல் நோக்கில் ஆராய வேண்டியது மத, இனப் பயங்கரவாதங்கள் பெருகியுள்ள இந்தக் காலத்திற்கு இன்றியமையாததாகிறது.

இது மிக மிக நீண்ட காலப் பிரச்சனையாக இருக்கின்ற காரணத்தால், அனைவரும் ஆழமாகச் சிந்திக்கவும், கலந்துரையாடி கேள்விகள் எழுப்பவும், கேள்விகளுக்கு ஏற்ற பதில்களைக் கண்டுபிடிக்கவும், அவற்றைத் திரும்ப ஆராயவும் கால நீட்டிப்பு அவசியமாகிறது. இதனால், வாரத்திற்கு இரண்டு மாலைப் பொழுதுகளாக, ஆறு மாதங்களுக்கு இந்த வகுப்புகள் ஏற்பாடு செய்யப்படுகின்றன. இந்த வகுப்புகளின் நிறைவில் உலகிற்கு ஒரு புதிய அறிவியல் வழி ஆன்மீகத் தெளிவு கிடைக்கும் என்பதில் ஐயம் இல்லை.

## பயங்கரவாதத்திற்கு மருந்து எது?
## ‘தமிழர் ஆன்மவியல்’

மேலும் விவரங்களுக்கு,
பேராசிரியர் முனைவர் மு. தெய்வநாயகம், M.A., Ph.D.,
நிறுவனர் – **உலகத் தமிழர் ஆன்மவியல் இயக்கம்,**
278, கொன்னூர் நெடுஞ்சாலை, அயன்புரம், சென்னை–600023.
Email: tamilarsamayam2010@gmail.com ☎ 9144–26743842; 26740457; 9444817394; 9840003842



# கங்கை நதியும் பாவ மன்னிப்புக் கோட்பாடும்

தொடர் – 5

ஜோயல் எஸ். ஞானராஜ்

## 5. சமய வரலாற்றில் கங்கை

கங்கையைப் பற்றி கூறப்படும் மத ரீதியிலான புராணக் கருத்துகளுக்குப் பஞ்சமில்லை. கங்கை சிவனின் தலைமுடியி–ருந்து வருகிறது என்றும்,[1] கங்கை இமாவதி (இமாலயம்)யின் மூத்த குமாரத்தி என்றும் கூறப்படுகிறது.[2]

கங்கையிலுள்ள தலையாய வழிபாட்டு இடமான கங்கோத்ரி என்னும் பகுதி, கங்காத்துவாரா, ஹ(அ)ரத்துவாரா, ஹ(அ)ரித்துவாரா, மாயாபுரி, மாயாபுரா, கனகியாலா எனப் பல்வேறு பெயர்களிலும் அழைக்கப்படுகிறது.[3]

கங்கையின் உற்பத்தி இடமாகக் கருதப்படும் இப்பகுதி, விஷ்ணுதர்ம சூத்திரம் (LXXXV. 28), மகாபாரதம் (III. 81–14.90–21. 142–9–10. XIII.25–13). கூர்ம புராணம் (I,15.41–47. II.20–33), அக்கினி புராணம் (IV. 7), பத்ம புராணம் (V.5,3. V.26,103), மத்சிய புராணம் (XXII.10) ஆகியவற்றில் விளக்கப்பட்டுள்ளது.[4]

இப்பகுதி இந்தியாவின் ஏழு புனித நகரங்களுள் ஒன்றாகும்.[5] யுவான்–சுவாங் என்பவரால் பார்வையிடப்பட்ட இவ்விடம், அல்–பிரூனி (973–1048) என்னும் அரபிய வரலாற்றாசிரியரின் குறிப்பில் கங்கையின் மூலாதாரமாகக் கூறப்பட்டுள்ளது.[6]

சிவனையும் விஷ்ணுவையும் பின்பற்றுகிறவர்களுக்கிடையே, இந்நதியை எந்த தெய்வம் பிறப்பித்தது என்னும் சர்ச்சைத் தொடர்ந்து நீடிக்கிறது.[7]

பண்டைய 'இந்தியா' பற்றிய புவியியல் நூலாசிரியர் அலெக்சாண்டர் கன்னிங்காம் இதனைப் பற்றி விளக்குவது:

> *''விஷ்ணு புராணத்தில் இப்பகுதி, விஷ்ணுவின் இடது கா–ன் கட்டை விரல் நகத்தி–ருந்து வந்ததாகக் கூறப்படுகிறது. வைணவர்கள் இதனை, 'ஹரி–கி–ஹரன்' அல்லது 'ஹரி–கி–பெய்ரி' (விஷ்ணுவின் காலடித் தடங்கள்) எனக் கூறி, தங்கள் ஆதாரத்தைச் சுட்டிக் காட்டுகின்றனர்.''*[8]

> *''மறுமுனையில் சைவர்கள் இதன் தெளிவான பெயர் 'ஹராதுவாரா' (சிவனின் வாயில்) என்பதே அன்றி, 'ஹரி–துவாரா' அல்ல என்கின்றனர்.*[9]

> *'ஹ(அ)ரித்துவார்' அல்லது 'விஷ்ணுவின் வாயில்' என்னும் பெயர், தற்போது அபுரீகன் மற்றும் ரஷித்துத்தீன் போன்ற அரபியப் புவியியலாளர்களது குறிப்புகளில் 'கங்காத்துவாரா' என்றே குறிப்பிடப்பட்டுள்ளது.''*[10]

மேலும் அவர் குறிப்பிடுவது:

> *''திராவிடனான காளிதாஸ், தனது மேகதூதம் என்னும் நூ–ல், ஹரித்துவாரா பற்றி எவ்விதக் குறிப்பும் தராமல், 'கன்கல்' என்றே கூறியுள்ளார். ஆனால், அவரது சமகாலத்தவரான அமரன்சின்கா என்பவர், இதனைக் கங்கையின் நேர்ப் பெயர்களில் ஒன்றான விஷ்ணுபாதி என்றே கூறுகிறார்.''*[11]

'இந்தியத் தொல்பொருள் அகழ்வாராய்ச்சியின் தந்தை' என அழைக்கப்படும் அலெக்சாண்டர் கன்னிங்காம், ஹரித்துவார் என்னும் பெயர் தோன்றிய காலத்தைப் பற்றி பின்வருமாறு குறிப்பிடுகிறார்:

*"கங்கை விஷ்ணுவின் பாதத்தி–ருந்து தோற்றம் பெறுகிறது' என்னும் பழங்கதை குறிப்பு கி.பி. 5ஆம் நூற்றாண்டு காலத்தவையாக உள்ளது மிகத் தெளிவாகிறது."*[12]

மேலும் அவர், இப்பெயரில் கட்டப்பட்ட விஷ்ணுபாதா கோவில் கட்டப்பட்ட காலம் பற்றிக் கூறுகையில்,

*"அபுரீகன் காலம் வரை விஷ்ணு பாதா கோவில் எதுவும் கட்டப்படவில்லை"*

என்கிறார்.[13]

மற்றொரு வரலாற்றுச் சான்றாக நிராத் சௌத்ரி கூறுவது:

*"பாகியான் இந்தியாவில் வருகை புரிந்தபோது இந்தியாவில் கோவில் வழிபாடு, சிலை வழிபாடு ஆகியன காணப்படவில்லை. ஆனால் ஹிவான் – டிசாங் என்பவரது காலத்தில் அவை வளர்ச்சி பெற்றிருந்தன."*[14]

இந்திய வரலாற்று அறிஞரான தெ. தேவகலா கோயில் வழிபாடு பற்றி எடுத்துரைப்பது:

*'கோயில் கட்டுதல், வழிபாடு போன்ற ஆகம முறைகளின் தோற்றம் வேதத்திற்கு முற்றிலும் மாறானவை. கோயில் வழிபாட்டின் தோற்றம் வேதத்திற்குப் புறம்பானது."*[15]

மேலும் அவர் எடுத்துரைப்பது,

*"கிறிஸ்துவிற்கு முற்பட்ட காலத்தில் இந்தியாவில் இருந்த வழிபாட்டு வடிவங்களான சிந்துவெளி வழிபாடு, பழந்திராவிட வாழிபாடு, ஆரிய வழிபாடு ஆகியவற்றில் 1). மூவொருமைக் கோட்பாடு, 2). அவதாரக் கோட்பாடு, 3). ப–நிறைவேற்றக் கோட்பாடு, 4). பாவ மன்னிப்புக் கோட்பாடு, 5). விசுவாசத்தினால் மீட்புக் கோட்பாடு எனும் ஐந்து கோட்பாடுகளையும் காண முடியாது. ஏனென்றால் அவை வழிபாடுகளே அன்றி சமயங்களாக வளர்ச்சி பெற்றவை அன்று."*[16]

*"கிறிஸ்துவுக்கு முற்பட்ட நூற்றாண்டுகளைச் சார்ந்த சமயங்களான சமணத்திலும் பௌத்தத்திலும் மேற்கண்ட ஐந்து கோட்பாடுகளைக் காண முடியாது. காரணம் அவற்றில் கடவுள் கொள்கையே கிடையாது."*[17]

இந்திய அகழ்வாய்வு, சமய மற்றும் வரலாற்று அறிஞர்களின் ஏகோபித்த கூற்றுகளின் அடிப்படையில்,

இந்தியாவில் சிலை வழிபாடு, கோவில் கட்டி வழிபடுதல், கங்கையில் புனித முழுக்காடுதல் மற்றும் தேவகலா கூறும் ஐந்து கிறிஸ்தவக் கோட்பாடுகள் ஆகியன கிறிஸ்துவுக்குப் பிற்பட்டக் காலங்களிலேயே தோற்றம் பெற்றுள்ளன என்பது தெளிவாகப் பெறப்படுகிறது.

கங்கை நதியைத் தெய்வங்களுடன் இணைத்து வழிபடும் வழக்கம் கி.பி. 5–ஆம் நூற்றாண்டிற்குப் பிந்தின காலத்தைச் சார்ந்துள்ளது.

கங்கை நதி தெய்வப் பெயர்களுடன் இணைக்கப்பட்டு,

| | |
|---|---|
| கங்காதரன்[18]<br>கங்கைவேணியன்[19]<br>கங்காதரமூர்த்தி[20]<br>கங்காளமூர்த்தி[21]<br>கங்காளமா–[22] | = சிவன், |
| கங்கை அம்மன், கங்கம்மாள்[23] | = சக்தி, |
| கங்காசுதன்[24]<br>கங்கை தனயன்[25]<br>கங்கை மைந்தன்[26] | = குமரன், |
| கங்கை பெற்றோன்[27] | = பிள்ளையார் |

என்கிற புதிய தெய்வப் பெயர்கள் தோற்றம் பெற்றன.

இவை சிவக்குடும்பத்துடன் கங்கை இணைத்துக் கூறப்படுவதைத் தெளிவுப்படுத்துகின்றன.

கி.பி. 5ஆம் நூற்றாண்டில் தென் இந்தியாவில் தோன்றி தமிழ்ப்பக்தி இயக்கமான சைவத்தில் கூறப்படும், அப்பன், அம்மை, மகன் என்னும் கோட்பாட்டைச் சார்ந்து,[28] அதற்குப் பிந்தின காலக் கட்டத்தில் கங்கை சிவக்குடும்ப வழிபாடு உருவாகியுள்ளது என்பது பெறப்படுகிறது.

இந்து மதத்தின் மூவொருமை / மும்மூர்த்திக் கோட்பாடு (அப்பன், அம்மை, மகன்) கிறிஸ்துவிற்கு முந்தின இந்திய வழிபாடுகளான இயற்கை வழிபாட்டுடைய சிந்துவெளி திராவிட வழிபாட்டிலோ, அல்லது கி.மு. 6–ஆம் நூற்றாண்டில் தோன்றின நாத்திக சமயங்களான சமணம் மற்றும் பௌத்தம் ஆகியவற்றிலோ காணப்படவில்லை என்பது வரலாறு.[29]



மேலும், இந்த இறைக்குடும்ப வழிபாடு, கி.மு. 6–ஆம் நூற்றாண்டி–ருந்து இந்தியாவில் நுழைந்த ஆரியர்களான

| | |
|---|---|
| பெர்சியர் | (கி.மு. 6–ஆம் நூற்றாண்டு) |
| கிரேக்கர் | (கி.மு. 4–ஆம் நூற்றாண்டு) |
| சகர் | (கி.மு. 2–ஆம் நூற்றாண்டு) |
| குசானர் | (கி.பி. 1–ஆம் நூற்றாண்டு) |
| ஹுனர் | (கி.பி. 4–ஆம் நூற்றாண்டு) |
| ரோமர் | (கி.மு. 4–ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 4–ஆம் நூற்றாண்டு வரை) |

ஆகியோரிடத்திலும் காணப்படவில்லை.[30]

எனவே, இந்தியாவில் புதியதாகத் தோன்றியுள்ள இக்கோட்பாடு இந்தியாவில் அக்காலத்தில் வந்த ஏதோ ஒரு சமயத்தவரிடமே காணப்பட்டிருக்க வேண்டும்.

கி.பி. முதலாம் நூற்றாண்டில் இந்தியாவில் பரவிய கிறிஸ்தவ சமயத்திலேயே இப்படிப்பட்ட ஒரு கோட்பாடு காணப்படுகிறது என்றால் அது மிகையாகாது.

> *“இந்து மதத்தின் மும்மூர்த்திக் கோட்பாடு தோன்றுவதற்கு முன்பே கிறிஸ்தவம் இந்தியாவில் வேரூன்றியிருந்தது”*

என இக்கோட்பாடு பற்றி ஜார்ஜ் புட் மோர் என்பவர் கூறுவது குறிப்பிடத்தக்கது.[31]

கிறித்தவம் கூறும் தந்தை (பிதா–Father), மகன் (குமாரன் –Son), பரிசுத்த ஆவி (Holy Spirit) என்னும் கோட்பாட்டிற்கும், அப்பன், அம்மை, மகன் என்னும் கோட்பாட்டிற்கும் அதிக வேற்றுமையில்லை.[32]

தந்தை, மகன், தூய ஆவி என்னும் மூன்று நிலைகளில் விளங்கும் மூவொரு கடவுளைக் கொண்ட கிறித்தவத்தில் “தூய ஆவி” என்பது ஆண் பெண் எனும் பாகுபாடுகளைக் கடந்ததாய் விளங்குகிறது. பிற்காலத்தில் இந்தியாவில் தூய ஆவியை ஆண் வடிவில் கண்ட நிலை வைணவமாகவும், பெண் வடிவில் கண்ட நிலை சைவமாகவும் வளர்ச்சி பெற்றுள்ளது.

“தூய ஆவியைப் பெண்ணாகக் கண்ட நிலையில் மூவொரு கடவுள்” அப்பன், அம்மை, மகன் எனவும், ஆணாகக் கண்ட நிலையில் சிவன், விஷ்ணு, பிரமா எனவும் கொள்ளப்பட்டது. இவ்வாறு தூய ஆவி சைவத்தில் ‘‘அம்மை’’யாகவும், வைணவத்தில் “விஷ்ணு”வாகவும் விளங்குகிறது. மகனாக வந்த கடவுள் சைவத்தில் முருகன், பிள்ளையார் எனவும், வைணவத்தில் பிரமன், ஐயப்பன் எனவும் கொள்ளப்பட்டார். இவை சைவ, வைணவமாகப் பிரிந்திடினும் அடிப்படையில் ஒரே கடவுளின் வெவ்வேறு வடிவங்களாகக் காணப்படுவதால் இவற்றிற்கிடையே இணைப்பு காணப்படுகிறது.[33]

சமய ஆய்வில் மிகுதியான ஆய்வுகளைப் படைத்தவராகக் காணப்படும் மு. தெய்வநாயகம் சென்னைப் பல்கலைக்கழகத்தின் முனைவர்ப் (Ph.D) பட்டத்திற்காக அளித்த ஆய்வேட்டில் கூறும் விளக்கம் கீழே தரப்படுகிறது.

> *“சிவனை வணங்குகிறவர்கள் சைவர்கள் எனவும், விஷ்ணுவை வணங்குகிறவர்கள் வைணவர்கள் எனவும் கூறுப. இருபெரும் சமயங்களும் மும்மூர்த்திகளாகிய முதற்கடவுளர் மூவரி–ருந்து எழுந்தன.*
>
> *அப்பன், பரிசுத்தாவி, மகன் என்பவற்றில் அப்பன், மகன் என்பன குடும்ப உறவுப் பெயர்கள் என்பதாலும், அப்பனி–ருந்து மகன் தோன்றுவதற்குக் காரணமாய் இருப்பவர் குடும்பத்தில் அம்மையாக இருப்பதாலும் – பரிசுத்தாவியை அம்மையென்றும் சொல்லலாம் என்ற நிலையில் அப்பன், அமமை, மகன் என்ற நோக்கில் சைவம் வளர்ச்சி பெற்றது”.*

பரிசுத்த ஆவியை ‘‘அம்மை’’ என்று வழங்குவது விவி–யத்திற்கு முரண்பட்ட கருத்தாகும். “பரிசுத்தாவி” பெண் என்று கூறப்படாமல் இயேசு கிறிஸ்து ‘‘பரிசுத்தாவி’’யினாலே உற்பத்தியானார் என்பது விவி–யத்தின் கோட்பாடு (லூக்கா 1:35; மத்தேயு 1:18) பரிசுத்த ஆவியானவர் “பெண் தன்மை கொண்டவர்” எனக் கூறினால் பரிசுத்த ஆவியானவர் ஆண் தன்மை கொண்டவர் என்கிற எதிர்க் கோட்பாடு எழுவதற்கு வாய்ப்புண்டு. இந்த இரண்டு கோட்பாடுகளின் அடிப்படையில் நாம் சைவ, வைணவத்தை நோக்கும்பொழுது பரிசுத்த ஆவி பெண் (சக்தி) என்னும் நிலையில் குமரன், பிள்ளையார் என்று இரு பிள்ளைகள் கூறப்படுவதை நோக்கலாம். அம்மைக்கு இரு குழந்தைகள் என்னும் நிலையில் அப்பன் சிவனாகவே விளங்குகிறார். அதே போன்று விஷ்ணுவுக்குப் பிரமன், ஐயப்பன் ஆகிய இரு குழந்தைகள் என்கிற நிலையில் விஷ்ணுவின் கணவனாகச் சிவன் கூறப்பட்டிருப்பது ஆழ்ந்து நோக்கத்தக்கது. தந்தை, மகன், பரிசுத்த ஆவி என்னும் நிலையில், சிவன் தந்தையாகவும், அம்மை பரிசுத்த ஆவியின் பெண் தன்மையாகவும் காட்டப்படுவதுடன், மகனாகிய இயேசு கிறிஸ்துவின் நான்கு தன்மைகளில், தீமையை வென்றவர் என்கிற தன்மையை விளக்கிக் குமரக் கடவுளும், இறந்து உயிர் பெற்றவர் என்னும் தன்மையை விளக்கிப் பிள்ளையாரும், சூரியனைப் போன்ற ஒளிமயமானவர் என்கிற தன்மையை விளக்கி ஐயப்பனும், உலகப் படைப்புக்குக் காரணமானவர் என்னும் தன்மையை விளக்கிப் பிரமனும் காட்டப்படுகின்றனர். இவை... கிறித்தவ சமயத்தின் விளக்கங்களாகவே காணப்படுகின்றன.[34]

இவற்றுள் பிரமனுக்குத் தனிச் சமயம் கிடையாது. மீதமுள்ள அறுவகைச் சமயங்களுள் தூய ஆவியின் பெண் தன்மையைச் சிறப்பித்துக் கூறும் சைவம், சாக்தம், கௌமாரம், காணாபத்தியம் ஆகிய நான்கும் சைவம் என ஒரு பிரிவாகவும், தூய ஆவியின் ஆண் தன்மையைக் கூறும் வைணவம், சௌரம் இரண்டும் வைணவம் என மற்றொரு பிரிவாகவும் விளங்குகின்றன. இவற்றுள் சைவம் ‘‘சிவனு’’க்குச் சிறப்பும், வைணவம் “விஷ்ணு”வுக்குச் சிறப்பும் கொடுக்கின்றன.[35]

“கிறிஸ்தவத்தின் பரிசுத்த ஆவியைப் பெண்ணாகக் கண்ட சமயம் சைவம்; ஆணாகக் கண்ட சமயம் வைணவம் என்பது உறுதி செய்யப்படுகிறது.[36]

“இறைவனின் மூன்று நிலைகளில் அருவ நிலையையும், உருவ நிலையையும் ஆணாகக் கூறும்போது, அருவுருவ நிலையையும் ஆணாகக் கொள்ளுதலே சிறப்பு என்னும் நிலையில் அப்பன், அம்மை, மகன் என்னும் குடும்ப உறவுப் பெயர்களுக்குப் பதிலாக, சிவன், விஷ்ணு, பிரமா என்னும் மும்மூர்த்திக் கோட்பாடு உருவாயிற்று எனலாம். இம்மும்மூர்த்திக் கோட்பாட்டிலும் தந்தை, மகன் என்னும் அடிப்படை உறவு நிலை பாதுகாக்கப்பட்டு வந்துள்ளமையைப் புராணங்கள் வெளிப்படுத்துகின்றன.”

“சிவனுக்குச் சக்தி வழியாக இரு பிள்ளைகள் கூறப்படுகின்றனர். அவர்கள் குமரக் கடவுளும், பிள்ளையாருமாவர். சக்தியின் ஆண் வடிவமாகக் கொள்ளப்பட்ட விஷ்ணுவும் தாய்மைப் பண்பி–ருந்து விடுபடவில்லை. ஐயப்பனின் தந்தை என்னும் நிலையில் சிவன் கூறப்படுகின்ற அதே வேளையில் தாய் என்னும் நிலையில் விஷ்ணு கூறப்படுகின்றது. மற்றும் பிரமன், விஷ்ணுவின் வயிற்றில் தோன்றியவர் என்பதும் நோக்கற்குரியது.[37]

கிறிஸ்தவத்தில் கூறப்பட்டுள்ள பிதா, சைவ, வைணவத்தில் சிவனாகவும் (அப்பனாகவும்), வல்லமையுள்ள பரிசுத்த ஆவியானவர் சைவத்தில் பெண்பால் வடிவம் கொண்டு அம்மனாகவும் (சக்தி), வைணவத்தில் ஆண்பால் வடிவம் கொண்டு விஷ்ணுவாகவும், இறைவனின் குமாரனான இயேசு கிறிஸ்து சைவத்தில் குமரன் (முருகன்), பிள்ளையார் (விநாயகன்) என்றும், வைணவத்தில் ஐயப்பன், (பிரமன்) என்றும் விளக்கப்படுகின்றனர்.

இந்த இறைக் குடும்ப வழிபாடு பிற்காலத்தில் கங்கை நதியுடன் இணைக்கப்பட்டு, வழிபடப்பட்டுள்ளது என்பது தெளிவாகிறது.

சைவத்தில் சிவனுக்கும், கங்கைக்கும் பிறந்தவனே ‘கங்கை மைந்தன்’, ‘கங்கை சுதன்’, ‘கங்கை தனயன் என்கிற பெயர்கள் கொண்ட குமரன் ஆவான். சிவனுக்கும் கங்கைக்கும் பிறந்தவரே ‘கங்கை பெற்றோன்’ என்னும் பெயர் கொண்ட விநாயகர் ஆவார். சிவனின் மனைவியாகிய கங்கை முருகன், விநாயகர் ஆகியோருக்குத் தாயாவதால் அவள் ‘கங்கையம்மன்’, கங்கம்மாய்(ள்)’ என்னும் பெயர்கள் பெற்றாள். சிவன் கங்காதேவியைத் துணையாகக் கொண்டபடியால் அவன் ‘கங்காதரன்’, ‘கங்கை வேணியன்’ என்னும் பெயர்களைப் பெற்றான்.

கிறிஸ்தவத்தின் தூய ஆவியானவரே சைவத்தில் கங்கையம்மனாகக் குறிக்கப்படுகிறார். இந்துக்கள் கங்கையைக் ‘கங்கம்மாள்’ என்றே அழைக்கின்றனர் என முன்னர்க் கண்டோம்.

வைணவத்தில் பரிசுத்த ஆவியானவர் ஆண்பாலாகக் குறிக்கப்படுகிறார். ‘கங்கை’, அரித்துவரா என்னும் பெயரில் விஷ்ணுவை வெளிப்படுத்துகிறது. விஷ்ணுவின் அவதார வடிவமான கிருஷ்ணன் ‘நதிகளில் நான் கங்கை’ எனக் கூறுவதும், கங்கை பிரமனுடன் இணைத்துக் கூறப்படுவதும் இங்கு நோக்குதற்குரியன.

‘கங்கை’ என்ற சொல் ‘நதி’ என்று பொருள் தருகிறது.[38] கங்கை என்னும் பெயரில் எந்த ஒரு நதியையும், நீர் நிலைகளையும் அழைக்கலாம். அருவுருவ நிலையில் விளக்கப்படும் தூய ஆவியானவர் ‘கங்கை’ (கங்கை=நீர்) எனப் பேதுருவழி மற்றும் தோமா வழிக் கிறிஸ்தவக் கொள்கையில் கூறப்பட்டுள்ளார். கிறிஸ்தவத்தின் தூய ஆவியானவரும் ‘நதி’ என்றே கூறப்பட்டுள்ளார்[39] என்பதும், தண்ணீராகக் (நதி) கூறப்படும் விஷ்ணுவைப் பற்றிய கூற்றும்[40] இங்கு ஒப்பிட்டுப் பார்க்கும் நிலையில் காணப்படுகிறது.

கி.பி. முதலாம் நூற்றாண்டில் இந்தியாவில் பரவிய கிறிஸ்தவ சமயமே மும்மூர்த்திக் கோட்பாட்டிற்கும், கங்கை–சிவக்குடும்ப வழிபாட்டிற்கும் அடித்தளமாக அமைந்துள்ளது என்பது பெறப்படுகிறது.

கிறிஸ்தவ சமயத்தின் விளக்கமாக உள்ள மும்மூர்த்தி வழிபாடு, பல்வேறு இந்தியப் புராணங்களிலும், கங்கையுடன் இணைத்து வழிபடும் நிலையிலும் தந்தை, மகன் என்னும் அடிப்படை உறவு நிலை மாற்றம் பெறாமல் பாதுகாக்கப்பட்டு வந்துள்ளது.[41]

| சமயம் | காலம் | இறைவன் | | |
|---|---|---|---|---|
| கிறித்தவம் | கி.பி. 1ஆம் நூற். | பிதா | பரிசுத்த ஆவி | குமாரன் |
| சைவம் | கி.பி. 5ஆம் நூற். | அப்பன் (சிவன்) கங்காதரன்/கங்கை வேணியன் | கங்கை அம்மன் | குமரன்– கங்கைதனயன் கங்காசுதன், கங்கை மைந்தன்; பிள்ளையார், கங்கை பெற்றோன் |

## அடிக்குறிப்புகள்

1. David Kinsley. Op.Cit., P. 247. "Ganges is Personified as the goddess Ganga one of Shiva's Wives, daughter of mountain Himalayas, before the river reaches earth it is the Milky way in the sky." Richard Cavendlish. ed.,

   Mythology: An Illustrated Encyclopedia. (London: Orbis publishing, 1980) P. 32 and Asiatic Mythology: A Detailed Description and Explanation of the Asiatic Mythologies of All Great Nations of Asia (London: George G. Harrap & co, 1963).P. 129.

2. E.Osborn Martin. Op.Cit., P. 24
3. Alexander Cunningham.Op.Cit., P. 407
4. N.N. Bhattacharya. Op. Cit., PP. 131- 132
5. Ibid; cf. Subadh Kapoor. Op. Cit., Vol.IX.P. 2792.
6. Alexander Cunningham.Op.Cit., P. 403
7. Ibid
8. Ibid
9. Ibid
10. Ibid. P. 405
11. Ibid
12. Ibid
13. Ibid
14. Nirad C. Chaudhari. Op. Cit., P. 57f.
15. தெ. தேவகலா. மு.நூ. பக். 73.
16. மே. ப. பக். 34.
17. மே. ப. பக். 35.
18. Tamil Lexicon. Vol. II.P. 635
19. Ibid, கதிர்வேள் பிள்ளை, தமிழ்ச் சொல்லகராதி, பாகம் இரண்டு. (சென்னை: உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், 1998). பக். 709
20. Ibid. P. 636. cf. நா. கதிரைவேற்பிள்ளை, தமிழ்மொழி அகராதி. (6ஆம் பதிப்பு).

    (New Delhi: Asian Educational Service, 2002). P. 351

21. கதிர்வேள் பிள்ளை. மு.நூ. பக். 709.
22. மே.ப.
23. Tamil Lexicon. Vol. II.P. 636
24. Ibid.P. 635
25. Ibid.P. 636
26. Ibid.P. 636
27. Ibid.
28. தெ. தேவகலா ஜோதிமணி, தமிழ்ப் பக்தி இயக்கத்தின் தோற்றமும் வளர்ச்சியும் (சென்னைப் பல்கலைக்கழகம் பி.எச்.டி பட்டத்திற்கான ஆய்வேடு, 1993). பக். 161.
29. மே.ப. பக். 158
30. மு. தெய்வநாயகம், "Who are the Aryans?" திராவிட சமயம் (சென்னை: திராவிட ஆன்மீக இயக்கம்) டிசம்பர், 2003. பக். 5.
31. George Foot Moore. History of Religion Vol. I (New York: T&T Clark. 1914). P. 345 எ–ர் தெ. தேவகலா மு.நூ. பக். 161
32. மே.ப. பக். 161
33. மே.ப.
34. மு. தெய்வநாயகம். விவி–யம், திருக்குறள், சைவ சித்தாந்தம் – ஒப்பாய்வு. (சென்னைப் பல்கலைக் கழக பி.எச்.டி பட்டத்திற்கான ஆய்வேடு,1985). பக். 130–131.
35. மே.ப.
36. தெ. தேவகலா, மு.நூ. பக். 167. cf, யா.தா. பாசுகரதாசு. அறுவகை தரிசனங்களும், தமிழர் சமயமும் (சென்னைப் பல்கலைக்கழகம், பி.எச்.டி பட்டத்திற்கான ஆய்வேடு, 1999) பக். 181–184.
37. மு. தெய்வநாயகம். மு.நூ. பக். 13–14; cf, ஏ. ஜான்சன் தங்கையா, தமிழ் இலக்கியங்களில் மூவொருமைக் கோட்பாடு. (சென்னைக் கிறிஸ்தவக் கல்லூரி, பி.எச்.டி பட்டத்திற்கான ஆய்வேடு, 2003).
38. "Ganga: River in general, the proper name of the Ganges becoming a common noun to denote any river". Tamil Lexicon. Vol. II.P. 636
39. "பண்டிகையின் கடைசி நாளாகிய பிரதான நாளிலே இயேசு நின்று, சத்தமிட்டு: ஒருவன் தாகமாயிருந்தால் என்னிடத்தில் வந்து பானம் பண்ணக்கடவன். வேதவாக்கியம் சொல்லுகிறபடி என்னிடத்தில் விசுவாசமாயிருப்பவன் எவனோ, அவன் உள்ளத்தி–ருந்து ஜீவத் தண்ணீருள்ள நதிகள் ஓடும் என்றார். தம்மை விசுவாசிக்கிறவர்கள் அடையப் போகிற ஆவியைக் குறித்து இப்படிச் சொன்னார்." (யோவான் 7:37–39)
40. "The character of Vishnu is faithfully Portrayed in the caste marks of the Vaishnavas. Their distinguishing is a V- shaped sign on their foreheads with the point down wards. This identifies Vishnu with "Water" as the apex pointing upwards a less appropriate symbol for Siva. It is the symbol both of life giving and of destructive force as typified in "Fire". In this connection, it is worth noticing that the Vaishnavas frequently call Vishnu Narayan. The explanation of this is given in the 'Insti tutes of Manu, (Ch.i.V.10). "The Waters called Nara, because they were the first production of Nara or the Spirit of God; and since they were his first "ayana" or place of motion he is called Narayana. Vishnu as light is said to be produced from water". E. Osborn Martin. Op.Cit., P. 96.

    சைவத்தில் அம்மையும், வைணவத்தில் விஷ்ணுவும் தூய ஆவியானவர் என்ற நிலையில் நெருப்பாகச் சித்தரிக்கப்படுவதும் ஆழ்ந்து நோக்கத்தக்கது.

41. தெ. தேவகலா மு.நூ. ப. 184.

### பயிற்சி கொடுக்கப்பட்ட
# தமிழின அர்ச்சகர்கள் வெளியே நிறுத்தப்பட்டது ஏன் ???
### - சில கேள்வி பதில்கள்

– முனைவர் தெ. தேவகலா

**90.** அர்ச்சகர் பயிற்சி கொடுக்கப்பட்ட 200–க்கும் மேற்பட்ட தமிழின அர்ச்சகர்கள் சைவ, வைணவமாகிய இந்து மதக் கோவில்களில் அர்ச்சனை செய்ய அனுமதிக்கப்படாமல் வெளியே நிறுத்தி வைக்கப்பட்டது ஏன்?

அவர்கள் பிராமணர் அல்லர் என்ற ஒரே காரணத்திற்காக,

**91.** பிராமணர் மட்டும்தாம் சைவ, வைணவமாகிய இந்து மதக் கோவில்களில் அர்ச்சனை செய்ய உரிமை பெற்றவர்களா?

இதுதான் நடைமுறையில் உள்ளது.

கோவில் கருவறைக்குள் சென்று

*‘கடவுளை வழிபடுவதற்குத் தகுதியற்றவர் தமிழினத்தவராம்’.*

**92.** இப்படிக் கூறுபவர் யார்?

ஆரிய பிராமணர்கள்தாம்.

***“தமிழ் இனம் கீழான நீச இனம்” ,***
***“தமிழ் மொழி கீழான நீச மொழி”***

என்கின்றனர் அவர்கள். எனவே, கோவில் கருவறைக்குள் சென்று கடவுளை வழிபடுவதற்கு பிராமணர்களாகிய அவர்களுக்கு மட்டும்தாம் உரிமையுண்டாம். தமிழினத்தவர்களுக்கு இல்லையாம்.

**93.** பிராமணர்களுக்கு மட்டும் இந்த உரிமை ஏன்? சைவ, வைணவமாகிய இந்து மதம் என்பது அவர்களுடைய மதம் என்பதாலா?

இல்லை, இந்து மதம் என்பது பிராமணர்களுடைய மதம் கிடையாது என்பதைக் குறித்து ஏற்கெனவே பார்த்தோம்.

**94.** இல்லை என்று எப்படிக் கூற முடியும்? இந்து மதத்திற்கு அடிப்படையே ஆரியரின் நான்கு வேதங்கள்தாமே?

இல்லை, இந்து மதமும் நான்கு வேதங்களும் வேறு வேறானவை.

**95.** என்ன வேறுபாடு?

ஆரியரின் நான்கு வேதங்களின்படி அவர்களுடைய வழிபாட்டில் ஆடு, மாடுகளை யாகம் என்ற பெயரில் கொன்று தீயில் சுட்டு உண்பது மிக முக்கியமானது.

ஆனால், சைவ, வைணவ சமயக் கோவில்களில் ப–பீடம் காணப்படுகிறது. ஆனால் ப–பீடத்தில் உயிர்ப் ப– செலுத்தப்படுவதில்லை. சைவ, வைணவ சமயங்களின் வழிபாட்டில் உயிர்ப் ப–க்கு இடமில்லை.

**96.** ஆரியர்கள் உயிர்களைப் ப–யிட்டு வழிபடுவதில்லையே?

பொதுவாக நாம் அனைவரும் இப்படித்தான் நினைக்கின்றோம். ஆனால், அண்மையில் கும்பகோணத்தில் சங்கராச்சாரியார் வழிபாட்டில் குதிரைகள், ஆடுகள், மாடுகள் சுட்டு உண்ணப்பட்டு காணாமல் போனமை பற்றிய செய்தி நாம் அனைவரும் அறிந்ததே.

**97.** ஆரிய வேதங்களில் குதிரைகள் ப–யிடப்படுவது பற்றி கூறப்பட்டுள்ளதா?

ஆமாம். ஆடுகள், மாடுகள் மட்டுமல்ல குதிரைகளும் கொல்லப்பட்டு, உண்ணப்படுவதை வேதங்கள் காட்டுகின்றன. (‘அஸ்வமேதா’ – குதிரையாகம், RV 1.162-163,)[1]

ஆரியர்களின் நான்கு வேதக் கோட்பாட்டிற்கும் சைவ, வைணவ அடிப்படைக் கோட்பாடுகளுக்கும் மிகுந்த வேறுபாடுகள் உள்ளன.

**98.** ஏதேனும் ஒரு வேறுபாட்டைக் கூறமுடியுமா?

சைவ, வைணவ சமயங்களின் அடிப்படைக் கோட்பாடுகள் 1. மூவொருமைக் கோட்பாடு 2. அவதாரக் கோட்பாடு 3. நம்பிக்கை வழி மீட்புக்

கோட்பாடு 4. ப– நிறைவேற்றக் கோட்பாடு 5. பாவ மன்னிப்புக் கோட்பாடு ஆகிய இவ்வைந்து கோட்பாடுள் ஆகும். ஆனால் வேதங்களில் இவ்வைந்து கோட்பாடுகளைக் காண முடியாது.

**99.** இந்து மதமாகிய சைவ, வைணவக் கடவுளரின் பெயர்களையாவது ஆரியரின் நான்கு வேதங்களில் காண முடியுமா?

இல்லை. சைவ, வைணவக் கடவுளரின் பெயர்களான சிவன், சக்தி, குமரன், பிள்ளையார், ஐயப்பன் போன்ற பெயர்களைக் கூட வேதங்களில் காண முடியாது. ஏற்கெனவே நாம் குறிப்பிட்டவாறு வேதங்களில் சொல்லப்படும் விஷ்ணு என்பது சூரியனைக் குறிக்கிறது. ஆனால், வைணவத்தில் உள்ள விஷ்ணுவோ முழுமுதல் கடவுளைக் குறிக்கிறது. இவ்வாறே, வேதத்தில் கூறப்பட்டுள்ள 'ருத்திரன்' என்பது இடி, மழை, மின்னலைத் தெய்வமாகக் கூறுவது. ஆனால், சைவத்தில் 'சிவன்' என்பது அன்பே வடிவான முழுமுதல் கடவுளைக் குறிக்கிறது.

**100.** அப்படியானால் சைவ, வைணவ மதங்கள் பிராமணர்களுடைய மதங்கள் இல்லையா?

இல்லை.

சைவ, வைணவ மதங்கள் தமிழரால் உருவாக்கப்பட்ட தமிழர் மதங்கள்.

**101.** சைவ, வைணவக் கோவில்கள் பிராமணர் கட்டிய கோவில்கள் இல்லையா?

இல்லை.

கடவுளுக்குக் கோவில் கட்டி வழிபடும் வழிபாட்டு முறையே ஆரிய வேதத்தில் கிடையாது.

**102.** அப்படியானால் பிராமணர்களுக்கும் இந்து மதமாகிய சைவ, வைணவ மதங்களுக்கும் என்னதான் தொடர்பு?

ஒன்றுமில்லை. பிராமணர்களுக்கும் இந்து மதத்திற்கும் எந்தத் தொடர்புமில்லை. எனவே தான், சிவபெருமானைக் கடவுள் என்றோ

விஷ்ணுவைக் கடவுள் என்றோ கூறாமல், 'நானே கடவுள்' என்று தங்களைத் தாங்களே கடவுள் என்று கூறிக் கொள்கிறார்கள். இவ்வாறு, கடவுள் கொள்கைக்கு எதிரானவர்களே ஆரிய பிராமணர்கள் என்பதையும் கடவுளுக்கே தாங்கள்தாம் சக்தியைக் கொடுப்பதாகக் கூறும் இவர்கள் தங்களையே 'பூதேவர்' அதாவது, பூலோகத்திலுள்ள கடவுள் என்று அழைத்துக் கொள்வதையும் ஏற்கெனவே பார்த்தோம்.

**103.** சைவ, வைணவ மதங்களும் பிராமணர்களுடையவையல்ல; கோவில் கட்டி வழிபாடு செய்வதும் அவர்கள் வேதத்தில் இல்லாத ஒன்று என்றால் அவர்கள் இந்து மதமாகிய சைவ, வைணவ சமயக் கோவில்களில் எவ்வாறு நுழைந்தனர்?

கி.பி. 7ஆம் நூற்றாண்டிற்குப் பின் ஆரியர் இந்தியத் திராவிடரின் ஆட்சியைப் பிடித்தனர். விளைவு நம் ஆட்சி அவர்கள் வசமாயின. ஆட்சியைப் பிடித்ததும் இந்திய மண்ணின் மைந்தராகிய நம் அனைவரையும் அடிமைப்படுத்த இன, சாதி ஏற்றத்தாழ்வுக் கொள்கையை அதாவது வருணாசிரமக் கொள்கையை உருவாக்கினர் ஆரியர்.

**104.** வருணாசிரமக் கொள்கையை நம்மை அடிமைப்படுத்த எவ்வாறு பயன்படுத்தினர்?

வருணாசிரமக் கொள்கையின்படி வெளி நாடுகளி–ருந்து வந்த மிகச் சிறுபான்மையினரான ஆரியர் பிறப்பால் உயர்ந்தவர்; இந்திய மண்ணின் மைந்தராகிய பெரும்பான்மையினரான நாம் அனைவரும் பிறப்பால் தாழ்ந்தவர் என்று நம்மை ஏற்றுக் கொள்ள வைத்தனர்.

**105.** நாம்தாம் இந்தியாவில் பெரும்பான்மையினர் ஆயிற்றே. அப்படி இருக்கும்போது அந்தச் சிறுபான்மையினராகிய ஆரியர் நம்மை இழிவுபடுத்த உருவாக்கிய இன, சாதி ஏற்றத்தாழ்வுக் கொள்கையை நம் முன்னோர் ஏன் ஏற்றுக் கொண்டனர்?

விரும்பி இதை ஏற்றுக்கொள்ளவில்லை. ஆட்சி அவர்கள் கையில் இருந்ததால் நம்மை இழிவுபடுத்துகின்ற இக்கொள்கையை நம் மேல் திணித்தனர். நம்மை மூளைச் சலவை செய்து இக் கொள்கையால் நம்மை அடிமைப்படுத்த, நம் சைவ, வைணவ மதங்களைப் பயன்படுத்தினர்.

**106.** நம் சைவ, வைணவ மதக் கொள்கைகள் சிறந்த கொள்கைகள்தாமே. அப்படியிருக்க நம் மதத்தை வைத்தே நம்மை எப்படி அடிமைப்படுத்தினர்?

நம் சைவ, வைணவ மதக் கொள்கைகள் சிறந்த கொள்கைகள்தாம். ஆனால், ஆதிசங்கரர் கி.பி. 9 ஆம் நூற்றாண்டில் நம் சைவ, வைணவ இலக்கியங்களுக்கு உரை எழுதும்போது நம் மதங்களின் அடிப்படைக் கொள்கைகளைத் திரித்து, தவறான உரை எழுதினார். விளைவு, நாம் அனைவரும் பிறப்பால் தாழ்ந்தவர்கள்; ஆரியர்களே பிறப்பால் உயர்ந்தவர்கள் என்று நம் மதங்களே சொல்வது போன்ற தவறான உரைகள் மூலம் நம்மை மூளைச் சலவை செய்து நம்ப வைத்தார்.

107. நம்மை இழிவுபடுத்துகின்ற இந்த வருணாசிரமக் கொள்கையை நம் தலைவர்கள் யாருமே எதிர்க்கவில்லையா?

எதிர்த்தார்கள். எதிர்த்தவர்கள் பஞ்சமர் (தீண்டத்தகாதவர்) என முத்திரை குத்தப்பட்டு துன்புறுத்தப்பட்டனர். வேறு வழியின்றி ஏற்றுக் கொண்டவர்களோ சூத்திரர் என முத்திரை குத்தப்பட்டனர். மொத்தத்தில் ஆட்சியை நாம் இழந்திருந்ததால் ஆரியர்கள் பல நிலைகளிலும் நம்மை இழிவுபடுத்தி அடிமைப்படுத்தினர்.

ஆட்சியைத் தங்கள் கைகளில் எடுத்துக் கொண்ட ஆரியர், நம் சமயங்களையும் கையில் எடுத்துக் கொண்டனர்.

நமது தமிழர் சமயக் கோவில்களில்

பூசாரிகளாயிருந்த நம் தமிழ்ப் பெரியவர்கள் விரட்டப்பட்டார்கள். 'பார்ப்பானுக்கு மூத்த பறையன் கேட்பாரில்லாமல் கீழ்ச்சாதியானான்' என்னும் பழமொழியும் இதை விளக்குவது ஏற்கெனவே எடுத்துக்காட்டப்பட்டது.

108. பறையர் என்பது நம் தமிழ்ப் பெரியவர்களைக் குறித்த பெயரா?

பறைதல் என்றால் 'சொல்லுதல்' என்று பொருள். முக் காலங்களையும் ஆராய்ந்து மக்களை நல் வழிபடுத்தும் கருத்துகளைக் கூறுவோர் பறையர் எனப்பட்டனர். எனவே, சமுதாயத்தில் அவர்கள் சிறந்த நிலையில் மதிக்கப்பட்டனர்.

109. பறையர் சமூகத்தில் சிறப்பாக நடத்தப்பட்டனர் என்பதற்கு ஆதாரம் கூற முடியுமா?

கிராமத்தார் எழுதிக் கொடுத்த ஆவணங்களில் பறையர்கள்தாம் கையெழுத்திட்டுள்ளனர் என்று 'தமிழக வரலாறு – மக்களும் பண்பாடும்' எழுதிய வரலாற்று ஆசிரியர் கே.கே. பிள்ளை (பக். 313 – 314) கூறியுள்ளது குறிப்பிடற்குரியது.

இவர்கள் கிராமத் தலைவர்களாகவும், நகராட்சி மன்ற மூப்பர்களாகவும் இருந்ததோடு கிராமத்தில் நடக்கும் பல்வேறு நிகழ்ச்சிகளிலும் இவர்களுக்கே சிறப்பான இடம் அளிக்கப்பட்டதை M. சீனிவாச ஐயங்கார் என்னும் வரலாற்றாசிரியர் தமது 'Tamil Studies' என்னும் நூ–ல் (ப. 81) எழுதியுள்ளார்.

இவ்வாறே பார்ப்பார், அந்தணர், ஐயர் என்பவையும் தமிழ்ப் பெரியவர்களைக் குறித்த பெயர்களே. பிராமணருக்கு முன் இவர்கள்தாம் கோவி–ல் திருத்தொண்டு புரிந்துள்ளனர்.

110. பார்ப்பார், அந்தணர், ஐயர் என்னும் தமிழ்ப் பெரியவர்கள் பிராமணருக்கு முன் கோவி–ல் திருத்தொண்டு புரிந்துள்ளனர் என்பதற்கு ஆதாரம் தர முடியுமா?

'தமிழர் வரலாறு' எழுதிய ஞா. தேவநேயன் என்னும் சிறந்த அறிஞரும் தம் நூ–ல் (ப.307) இதை விளக்கியுள்ளார்.

111. இவ்வளவு சீரும் சிறப்புமாக இருந்த தமிழ்ப் பெரியவர்கள் குறிப்பாக எந்த ஆட்சியாளர் காலத்தில் நம் தமிழர் சமயக் கோவில்களி–ருந்து வெளியேற்றப்பட்டனர்?

தமிழரல்லாத மூன்றாம் குலோத்துங்க சோழன் ஆட்சிக் காலத்தில் தமிழ்ப் பூசாரிகள் தமிழர் கோவில்களி–ருந்து வெளியேற்றப்பட்டனர். பிராமணர்கள் நம் தமிழர் சமயக் கோவிலுக்குள் நுழைந்தனர்.

நம் தமிழர் சமயக் கோவிலுக்குள் நுழைந்த பிராமணர்கள் நம்மையும் நம் மொழியையும் இழிவுபடுத்தி அடிமைப்படுத்தியுள்ளனர்.

112. தமிழர் சமயக் கோவிலுக்குள் நுழைந்த பிராமணர்கள் நம்மையும் நம் மொழியையும் அடிமைப்படுத்தியுள்ளனர் என்று எவ்வாறு கூற முடியும்?

சைவ, வைணவக் கோவில்களில் அர்ச்சகராகப் பணி புரியும் அவர்கள், தமிழ் நாட்டில் இருந்து கொண்டே, தமிழர்களால் கட்டப்பட்ட, நம் தமிழர் சமயக் கோவில்களில் அர்ச்சகராக இருந்து கொண்டே,

***'தமிழ் இனம் கீழான நீச இனம்" ,***
***"தமிழ் மொழி கீழான நீச மொழி"***

என்று கூறி, நம் தமிழ் மொழியையும் தமிழரையும் மிகவும் இழிவுபடுத்துவது இன்று வரை நடைமுறையில் உள்ளது.

சைவ, வைணவக் கோவில்களின் கருவறையில் சென்று, வழிபாடு நடத்த பிராமணரல்லாத தமிழினத்தவர்களாகிய நம் அர்ச்சகர்களுக்கு உரிமையில்லை என்று கூறி இன்று வரை தடுத்து வருகின்றனர்.

விளைவு...தமிழ் மொழியும் கோவிலுக்கு வெளியே...தமிழில் வழிபட வேண்டுமென்றால் தமிழில் வழிபாடு செய்யுமாறு கேட்டுக் கொள்ள வேண்டிய நிலை... தமிழ் நாட்டிலேயே இந்தக் கொடிய நிலை.

இவ்வாறே தமிழில் அர்ச்சகர் பயிற்சி பெற்ற நம் தமிழின அர்ச்சகர்களையும் கோவிலுக்கு வெளியே தடுத்து நிறுத்தி வைத்துள்ளனர் பிராமணர்.

113. பிராமணர்கள் தடுத்தால் என்ன?

பிராமணரல்லாத தமிழினத்தவர்களுக்கு

அர்ச்சகர் பயிற்சி கொடுத்தது தமிழக அரசுதானே?

தமிழக அரசுதான் அர்ச்சகர் பயிற்சி பள்ளியைத் தமிழகத்தில் தொடங்கி தமிழினத்தவர்களுக்கு அர்ச்சகர் பயிற்சி அளித்தது. ஆனால் இதே தமிழக அரசு பயிற்சி கொடுத்த 200–க்கும் மேற்பட்ட நம் தமிழின அர்ச்சகர்களை நம் சைவ, வைணவக் கோவில்களில் அர்ச்சகராகப் பணியமர்த்தாது வெளியே நிறுத்தி வைத்துள்ளதே.

**114.** பயிற்சி அளித்த அரசால் ஏன் பணியமர்த்த முடியவில்லை?

காரணம், பிராமணரல்லாத நம் தமிழனத்தவர்கள் அர்ச்சராகப் பணி செய்வதற்கு எதிராக, பிராமணர்கள் நீதிமன்றத்தின் வழி தடை வாங்கியிருக்கின்றார்கள். பிராமணர்கள் மட்டுமே அர்ச்சனை செய்ய வேண்டும் என்கின்றனர் அவர்கள்.

**115.** இந்து மதமாகிய சைவ, வைணவ சமயங்களுக்குத் தொடர்பே இல்லாத பிராமணர்கள் எவ்வாறு தடை வாங்கியுள்ளனர்?

இந்து மதத்திற்குத் தொடர்பே இல்லாத அவர்கள் இன்றைக்கு 'இந்துத்துவா' என்று சொல்லப்படும் அவர்களுடைய வருணாசிரமக் கொள்கையின் அடிப்படையில் விளக்கப்படும் சாஸ்திரத்தை அடிப்படையாக வைத்து, தடை வாங்கியுள்ளனர்.

**116.** நமது இந்து மதக் கோவிலுக்குள் நாம் செல்ல இந்து மதத்தி–ருந்து முற்றிலும் முரண்பட்ட, ஆரிய பிராமணர்களின் 'இந்தத்துவாவை' அடிப்படையாகக்கொண்டு வாங்கிய இந்தத் தடையை நீக்க இதுவரை வழி ஏதும் சொல்லப்படவில்லையா?

இதற்காகவே நீதிபதிகள் குழு அமர்த்தப்பட்டு பரிந்துரையும் செய்யப்பட்டுள்ளது.

**117.** அந்தக் குழுவின் பெயர் என்ன?

அதுதான் நீதிபதி மகாராசன் குழு. அவர்கள் தமிழின அர்ச்சகர்கள் நம் தமிழர் சமயக் கோவில்களில் அர்ச்சகராகப் பணி அமர்த்தப்பட பரிந்துரைகள் செய்துள்ளனர்.

**118.** அப்படியானால், அர்ச்சகர் பயிற்சி அளித்த தமிழக அரசு அதை நிறைவேற்ற வேண்டியதுதானே?

ஆம். நிறைவேற்றி இருந்திருக்க வேண்டும். இதுதான் நம் அனைவரின் எதிர்பார்ப்பும். இதற்காகத்தான் கடந்த 2010 சூலை 13 ஆம் நாள் நாம் போராடி கைது செய்யப்பட்டோம். தமிழின இழிவு துடைப்பதில் ஆர்வம் கொண்டவர்கள் போராடி வருகின்றனர்.

**119.** இத்தகைய தமிழின இழிவு துடைக்க நாம் இப்போது செய்ய வேண்டியது என்ன?

மத, இன பயங்கரவாதம் மற்றும் அடிமைத்தனத்தி–ருந்து மக்களை விடுவிக்க, தமிழர் சமயம், தமிழர் ஆன்மவியல் குறித்த விழிப்புணர்வு தமிழகமெங்கும் உருவாக்கப்படல் வேண்டும்.

–––––––

[1]http://en.wikipedia.org/ wiki/ Ashvamedha



A coin created by Samudragupta I to commemorate the Ashvamedha ritual.[3] The tethered horse is depicted on the left; the queen, carrying ritual equipment, is on the right. (http://en.wikipedia.org/ wiki/Ashvamedha)

**திரு. சங்கமித்தரா அவர்கள் எழுதிய 'நண்டு விற்ற காசு நாறாது' எனும் நூல் கிடைக்கப் பெற்றோம். நன்றி.**

# உலகின் பிற மொழிகளுக்கு அடிப்படை தமிழா?

- சாத்தூர் சேகரன்

ஆசிரியர் **திரு. சாத்தூர் சேகரன்** அவர்கள் தமிழ் மொழியைப் பிற மொழிகளோடு ஒப்பிட்டு ஆய்ந்து பல நூல்கள் எழுதியுள்ளார். தமிழ் மொழியை உலகின் பிற மொழிகளோடு ஒப்பிட்டு உலகின் மூல மொழியாகத் தமிழ் விளங்குகிறது என ஆய்வு செய்தும், எழுதியும், பேசியும் வருகின்றார்.

13–10–2010 முதல் 23–10–2010 வரை தஞ்சை, திருப்பூந்துருத்தி கருணையானந்தர் ஆசிரமத்தில் தமிழ் இன விடுதலைக்காக நாம் நடத்திய பயிற்சி வகுப்பில் ‘உலக முதன் மொழி தமிழ்’ எனும் மையப் பொருளில் கட்டுரை அளித்தார். மொழிக்கான விதிகளை ஆசிரியரே உருவாக்கி விளக்கியமை குறிப்பிடற்குரியது. அவ் விதிகள் இங்கே கொடுக்கப்பட்டுள்ளன. அவருடைய தமிழ் மொழி பற்றிய ஆய்வு ஆய்வாளர்களின் சிந்தனைக்கும், ஆய்வுக்கும் மேலும் வழிவகுப்பதால் அக் கட்டுரையின் பகுதிகள் சில இங்கே கொடுக்கப்பட்டுள்ளன.

– தெ. தேவகலா

**இக்கட்டுரை குறித்த ஆய்வு அடிப்படையிலான மாற்றுக் கருத்துகளை அன்புடன் வரவேற்கின்றோம்.**

மொழியும், மொழிசார்ந்த பல்வேறு இலக்கணக் கூறுகளும், வேர்ச்சொல் ஆய்வும் இணைந்த புதிய அறிவியற் கலைதான் மொழியியல் ஆகும்.

உலக மொழிகளுக்கெல்லாம் பொதுவிதியாக 15 விதிகளை மட்டுமே உருவாக்கி, அவற்றைத் தமிழுடன் இணைத்துக் காட்டியுள்ளேன். இந்த 15 விதிகளில் ஏற்கனவே 4, 5 விதிகள் நம் முன்னோர்களும் மேலை அறிஞர்களும் கண்டவை.

### விதி 1. சமவிதி

தமிழ்ச் சொற்களும் பிறமொழிச் சொற்களும் ஏறத்தாழ சமமாக – பெரிய மாறுத–ன்றி இருக்கும்.

| தமிழ் – சீனமொழி | தமிழ் – இலத்தீன் | தமிழ் – கிரேக்கம் | தமிழ் – ஆங்கிலம் |
|---|---|---|---|
| கண் – கண்<br>காண் – காண்காண்<br>நீ – நீ<br>நீம் –நீம்<br>தான் (அவன் அவள் அது) தா<br>தாம் (அவர்கள்) தாம் | பல – போ–<br>(அங்கு) அல்– – அல்–<br>(இங்கு) இல்– – இல்–<br>(எங்கு) எல்–– எல்–<br>(பெயர்) நாம் – நோமன்<br>அரச – ரெக்ஸ் | தொலை –Tele<br>பழைய – பழையோ<br>அரச – அர்க்க<br>குரு (நிறம்) – க்ரேம்<br>(எட்டு) அ – அக்ட்<br>அரி (சிங்கம்) அலெக்ஸ் | காசு– கேஷ்<br>பணம் – fund<br>(வழி) வாய் – Way<br>(பெயர்) நாம் – Name<br>பரிசு – Prize<br>பீடு – Pride |

| தமிழ் – ஜெர்மன் | தமிழ் – வங்காளம் | தமிழ் – கொரியன் | தமிழ் – ஜப்பானியம் |
|---|---|---|---|
| கோன் –கொனிக்<br>கோனி (அரசி) கொனிக்இன்<br>தெரு – ஸ்ட்ராஸ்<br>நாம் (பெயர்) – நாம்<br>(மகன்) மான் – மான்<br>மகடு (பெண்) – மகட் | நாம் (ஆம்) – ஆமி<br>நாம் (பெயர்) –நாம்<br>(சினை) சனம் – ஜன்<br>பாதை – பாத் | அப்பா – அப்பா<br>அம்மா – அம்மா<br>பூங்கொத்து – கொத்து | அன்னை – ஒன்னா<br>இரு – இசு<br>ராமா – லாமா<br>நெருப்பு – நிப்பு |

## விதி 2. சற்று மாறிய சமவிதி

| தமிழ் – ஆங்கிலம் | தமிழ் – இந்தி | தமிழ் – சமஸ்கிருதம் | தமிழ் – சுமேரிய மொழி |
|---|---|---|---|
| அப்பா – பப்பா | எழுதுகோல் – கலம் | கலை – கலா | அப்பா –அப் |
| மணி – Money | சாயம் (மை) – ஸ்யாகி | வித்தை – வித்யா | அத்தன் – அத்தா |
| தாதை – டாடி | தோழன் – தோஸ்த் | புதல்வன் – புத்ர | அம்மா – அம்மெ |
| (உடன்) பிறப்பு – Brother | கிழவன் (உழவன்) கிசான் | புதல்வி – புத்ரி | பாதை – பாத் |
| சேயன் – Son | ஆதன் – ஆத்மி | தெய்வம் – தைவ | பானை – பான |
| பொத்தகம் – Book | பாகன் – பாயி | பூசை – பூஜா | தரை –தர் |
| வீதி – Wide | | (நெய்) நேய – நேச | ஊர் – ஊரு |

## விதி 3. முன்மாறுதல் விலகுதல்

சொல்–ன் முதல் எழுத்திற்குப் பதில் வேறு எழுத்துகள் வரல் அல்லது முற்றாக அந்த எழுத்தே மறைந்து வருதல் (எ.கா.) ஊசி – சூசி, எழுத்து மாறுதல்

இரவு – ராவு / ராத் முதல் எழுத்து மறைதல்

| | முன்மாறுதல், விலகுதல் | | |
|---|---|---|---|
| கொல் – Kill | அரசன் – ராசன் / ராஜன் | க–ங்கம் – Cloth | முத்து – முக்தா – மோத்தீ H/U |
| சாலை – Hall | அரசி – ராசி / ராணி | வெல் – Win | அளதி – Salt |
| அம்மா – மம்மா / மம்மி | அரசு – ராசு / ராஜ்ய | வெற்றி – Victory | வன – நவ New, Neo |
| அரிசி – Rice | உருள் – ரோல் | பயம் – fear | வளையம் – Wheel |
| வாழ் – Live | உருண்டை – ரவுண்ட் | முழு – full | பசை – Paste |
| வசி – சீவி | வீழ்ச்சி – falls | பொறி – fry | மாரி – வர்ஷ் |
| அம்மா – மா | அப்பா – பா | மாடு (செய்) – ஈர் | ஈய் – Give |

## விதி 4. நடு மாறல் விலகல்

தமிழ்ச் சொல்–ன் நடு எழுத்து மாறும் அல்லது விலகும்

(எ.கா) அப்பா – அபா: இராக்கி, அரபி, ஹிப்ரு

ஐந்து – ஐது : தெலுங்கு, கன்னடம்

உயிர் – உசிர் : நடு எழுத்து மாறல்

| விலகல் | விலகல் | மாறல் | மாறல் |
|---|---|---|---|
| தாழ்வு – தாவு | துகள் – தூள் | துண்டு – துக்கடா | வாயனசாலை – வாசகசாலை |
| கிறுமம் – காம்வ | மூன்று – மூறு ; தெ / கன் | பக்கவடை – பக்கோடா | வாயனன் – வாசகன் |
| பகல் – பால் | ஐந்து –ஐது: தெ / கன் | படகு – Boat | வாச்சியம் – வாத்தியம் |
| பகுதி – பாதி | பத்து – பதி: தெ | புருவம் – புரிகம் : மலை | பண்டு – ப்ரூட்: |
| மிகுதி – மீதி | துவல் – நூல் | பயன் – பைதா | கடவு – Gate |
| தொகுப்பு – தோப்பு | பருப்பு – பப்பு :தெ / கன் | பழம் – பலம் : சமசு | பார்ப்பு – பாப்பா |
| எருமை – எம்மெ | மருந்து – மந்து : தெ / கன் | நேயம் – நேசம் | வாயில் – வாசல் |

## விதி 5. ஈற்றுவிதி

தமிழ்ச் சொல்–ன் கடை எழுத்து விலகலும் உண்டு; மாறலும் உண்டு.

எ.கா: கனவு: கடைசி எழுத்து விலகல் : கனா

பகரம் – Price கடை எழுத்து மாறல்.

| விலகல் | விலகல் | மாற்றம் | மாற்றம் |
|---|---|---|---|
| கனவு – கனா | ஓம்பு – ஓம் | நாகம் – ஸ்நேக் | நிலம் –நிலன் |
| இரவு – இரா | இயம்பு – இயம் | சிங்கம் – சிம்மம் | மரம் – மரன் |
| புறவு – புறா | வாத்தியம்பு – வாத்தியம் | பிள்ளை (பூனை) பில்– | ராஜா –ராயா, ராயல் |
| சுறவு – சுறா | இயல்பு – இயல் | | கிரையம் – Hire :Eng |
| உதயம் – உசா | அரச – ஷ : ஈரானி | | |

## விதி 6. முன்னுயிர் பெயர்ச்சி விதி

தமிழ்ச் சொல்—ன் முன்னுள்ள உயிர் இரண்டாம் எழுத்தின் பின் போய் சேர்ந்து அதனை நெடில் ஆக்கிவிட்டுத் தான் மறையும்.

அரசன் – ரஅசன் – ராசன்
உருண்டை ருஉண்டை – ரவுண்ட்

| பெயர்ச்சி விதி | பெயர்ச்சி விதி | பெயர்ச்சி விதி | |
|---|---|---|---|
| உருள் – Roll<br>உருட்டு – Rotate<br>உருண்டை – Round<br>உராய் – Rub<br>ஆறு – (றியா) ரியோ: ஸ்பானிஷ் | உலகம் – லோக<br>உலகம் (மக்கள்) – லோக்<br>அரசன் – ராசன்/ராஜன்<br>அரசி – ராசி/ராணி<br>அரசு – ராசு/ராஜ்ய | உரல் –ரோலு : தெலு<br>அரையன் – ராயன்/ராயல்<br>அரையம் – ராயம்<br>கால் – leg : ஆங்<br>உரை – ஒரல்: ஆங் | |

## விதி 7. பிறழ்ச்சி விதி

தமிழ்ச் சொல்—ன் கடைசி எழுத்து முன் எழுத்தாக மாறும்.
எ.கா. குதி – திகு : தெலுங்கு

| | | | |
|---|---|---|---|
| தசை– சதை<br>குதி – திகு<br>ராஜா – ஜார்<br>ஏகு – கு : go | அம்(தண்ணீர்) ம :அரபி, இராக்கி<br>அம்(வில், வாங்கு)—ம : சீனமொழி<br>ஊர் : Rural ஆங் | நிலா (லானி) – லு நா: ஆங், லத்தீன்<br>ஓது – துவா : அரபி<br>கர(கை)ருக : ரஷ்யன்<br>வாழ் – : Live ஆங் | |

## விதி 8. ஒ—க்குறிப்பு விதி

ஆதியில் மனிதன் உருவாக்கிய சில சொற்கள் ஒ—க்குறிப்பை அடிப்படையாகக் கொண்டவைதாம். பிற்காலத்தில் காரணத்தை உருவாக்கும் சிந்தனைத் தெளிவு ஏற்பட்டபின் தோன்றிய பலசொற்கள் காரணச் சொற்களாகும்.

எ.கா : சலசல – செல் சலசல – சலம் / ஜலம்

| | | | |
|---|---|---|---|
| பளபள – பளபளப்பு<br>பளிச் பளிச் – Flesh : E<br>சட்என – Sudden : E<br>காகா – காக்கா : இ. மொ<br>காகா – காக்கீ : வ.இ. மொ | படபட – படபடப்பு<br>சலசல – சலசலப்பு<br>கலகல – கலகலப்பு<br>விறுவிறு – விறுவிறுப்பு<br>விறுவிறு – விரைவு | பளபள – பளிங்கு<br>வழுவழு – வழுவழுப்பு<br>வழுவழு – வழுக்கு<br>பிசுபிசு – பிசுக்கு<br>சொதசொத – ஈரம் | |

## 9. காரணவழி

மனிதனின் அறிவு சற்று பெருகிய காலத்தில் – பொருட்களுக்குப் பெயரிட ஏதேனும் ஒருசில காரணங்களைக் கண்டறிய ஆரம்பித்தான். துருவி அறியும் சிந்தனைப் பெருக்கத்தால்தான் இம்முயற்சி சாத்தியமாயிற்று. பறப்பதால் பறவைகளுக்குப் பறவை என்ற பெயரிட்டான். கொடிய விலங்களுக்கு விலகியிருக்க வேண்டிய காரணத்தால் – அச்சத்தால் அவற்றிக்கு “விலங்கு” என்ற பெயரிட்டான். பூக்களில் திரிவதால் சிறிய பூச்சிகளுக்கு – பூ (அ)ச்சி என்ற பெயரிட்டான். இரத்தம் குடித்துப்பருத்த, சாக்கு மூட்டை போன்றிருந்த காரணத்தால் மூட்டைப் பூச்சிக்கு “மூட்டை” என்ற பெயரிட்டான். சில பகுதிகளில் செம்மூட்டை என்பர். உட—ன் தாழ்வுப் பகுதியைத் தாள் என்றான். மண்டை உச்சியி—ருக்கும் ரோமத்தை “மெய் ஈறு” என்றான். அது “மயிர்” என்று மாறிற்று. விர—ன் நுனியை அங்க இறுதி என்றான். அது அங்கு— ஆகி அங்குல் ஆயிற்று. ஐம்புலன்களையும் ஆட்டிப்படைக்கும் உறுப்புகள் பொருந்திய மண்டையைத் “தலையாய உறுப்பு” என்றான். அது “தலை” என நின்றுவிட்டது. இவ்வாறே “சீர் பொருந்திய இடம்” என்ற கருத்தில் சீரம் என்றான். அது சிரம் என்றும் சிரசு என்றும் திரிந்தது.

படிப்படியாகத் தமிழனின் பேச்சில் காரணப் பெயர்கள் மிகவும் பெருக்கம் அடைந்தன.

## 10. இனவிதி

நம்முன்னோர்கள் எழுத்துகளை உருவாக்கும்போது அவற்றை ஒ—, இன அடிப்படையில் அமைத்தனர்.
க்ங் ; ச்ஞ் ; ட்ண் ; த்ந் ; ப்ம் ; ய்ர் ; ல்வ் ; ள்ழ் ; ற்ன் என்பது ஓர் அடிப்படை
அ ஆ — எ ஏ — ய யா = ஒரு வகை
இ ஈ — எ ஏ — ய — யி = இன்னொரு வகை
உ ஊ — ஒ ஓ — வ — வு = மற்றொரு வகை
இவை அல்லாமல் ய=வ=க, ம=வ=ப, ன்/ண்—ந், இப்படிச் சில வகையிலும் ஒ— இன ஒற்றுமை கண்டனர்.

| | | |
|---|---|---|
| பாகற்காய் — பாவக்காய் | கல்தூண் — கற்றூண் | மகன் — மவன் |
| அவ்யானை — அய்யானை | ஆறு —ஏறு — யாறு | மகள் —மவள் |
| வங்காளம் — பங்காளம் | ஆணை —ஏனுகு — யானை | போகும் — போவும் |
| பெங்கால் | கல்அகம் — கனகம் | ஆகும் — ஆவும் |
| மாமா — மாவா | நம்மை — நன்மை | வீடு —பீடு; கன்னடம் |
| | மனது — மனசு, இ, மொ | உயிர் — உசிர் |
| | இலை — எலை | குயவன் — குசவன் |

மெய்யினை ங், ஞ், ண் போன்றன அவற்றின் வல்வெழுத்தைச் சார்ந்தே வரும். கங்கை, மஞ்சள், பாண்டம், தந்தம், அப்பம் — போன்று வரும். ஆனால் இடை எழுத்தில் ஒன்றை ஒன்று சார்ந்தவை அல்ல. எனினும் சில மட்டும், அய்யர், கல்வி, (முன்பகல்) முற்பகல் இவை போன்று அமையும். சிறப்பு ழகரம் பிற்காலத்தது.

## 11. சிக்கன விதி

மொழிச் சொற்கள் சிக்கனத்தையே நாடும். ஒவ்வொரு எழுத்தாக விலகினும் பொருள் மாறாது. ஒரு கட்டத்தில் பொருள் குழப்பம் நேராதிருக்க சில எழுத்துக்களைச் சேர்த்துக் கொள்ளும். இது ஒரு தொடர்கதை போல மாறி மாறி வரும். அம்மா— மா ; ம்+அம்மா = ம்மமா, மம்மி; சக்கை, ஆரம் என்ற இருசொற்கள் கூடி சக்கரத்தைச் சுட்டுகின்றன. பிற இந்திய மொழிகளில் இது சக்ர எனக் குறுகிறது. ர்ல் போன்ற மூக்கெழுத்துக்களைப் போல விலகுவதும் சேர்வதும் உண்டு. பார்வை — பாவை (விலகல்); கோவை — கோர்வை (தேவையற்ற ஒட்டு) நோ என்ற தொன்மைச் சொல்லுடன் யகரமும் வகரமும் சேர்ந்து நோய், நோவு போன்ற சொற்களை உருவாக்கும். எனினும் இலக்கிய வழக்கில் நோ என்ற சொல்லே இருக்கிறது. பாசறைக்கடை என்பது பாசறை ஆகி பசார் ஆகி விட்டது. தமிழறிஞர்கள் பலர் இது தமிழா என்று மலைக்கின்றனர். இவ்வாறே மாறுகடை மார்க்கெட் ஆகி ஐரோப்பிய மொழிகளில் உலாவுகிறது. ஊர்+து — பாசறை மொழி, பாசறைக் கடையைக் குறிக்கும். படை வீரர்களில் பல மொழியினர் கலந்து இருப்பதால் உருவான உருது மொழிச் சொற்கள் தமிழறிஞர்கள் பலருக்கு அடையாளம் தெரிவதில்லை. எங்கும் போ— மொழி அறிஞர்கள் இருப்பதைப்போல தமிழ்நாட்டிலும் அவர்கள் பலுகிப் பெருகியுள்ளனர். இவர்களது ஒரே வேலை — நல்ல தமிழ்ச் சொற்களைக்கூட தமிழல்ல என்று கூறுவது ஆகும்.

## 12. ஈட்டுவிதி

ஒரு சொல்—ல் ஓர் எழுத்தை இழக்க நேரிட்டால் அதற்குப் பதில் மற்றோர் எழுத்து தோன்றும் அல்லது குறைந்த பட்சம் குறில் நெடிலாகும்.

கனவு — வகரம் இழக்கப்படுகிறது. எனவே னகரம் னாகாரமாக — நெடிலெடுக்கிறது. கனவு — கனா. இவ்வாறே புறவு — புறா ஆகிறது; சுறவு சுறா ஆகிறது. பகல், பால் ஆகிறது. மரத்தொகுப்பு தோப்பாகிறது.

## 13. வக்கிரவிதி

எளிமையாகவும் இனிமையாகவும் உள்ள தமிழ்ச் சொற்களை வேகம் காரணமாகவும் சிதைப்பர்; பனிப்பகுதி மக்கள் காரணமின்றியும் சிதைப்பர். ஒ—யழுத்தம் இருந்தால்தான் மற்றவர்க்கும் புரியும் என்ற தவறான காரணமாகவும் இருக்கலாம். பீடு — Pride , பரிசு — Prize பகரம் (விலை) Price. கரை (அழுதல்/கூப்பாடு) — Cry (மண்) Clay அமை(பவர்) — (நண்பர்); இலத்தீன்; மித்ர: சமசுகிருதம் + இ,மொ, புதுமை அடிப்படையாகக் கொண்ட சொல் புதல்வன். புதல்வன் — புத்ர ; சமசுகிருதம். புதல்வி — புத்ரி ; சமசுகிருதம்.

## 14. ஒட்டு விதி

தமிழ்ச் சொல்லுடன் முன் ஒட்டு பின் ஒட்டு சேர்த்து தம் சொல்லாகப் பல மொழிகள் மாற்றிக் கொள்கின்றன. S ஒட்டு சேர்த்து மட்டும் ஆங்கிலத்தில் 500க்கு மேற்பட்ட சொற்கள் உள்ளன. தமிழ் எதிர்மறைகளான இல், இன், இம், அல், அன் போன்றன சேர்ந்து 1000க்கும் மேற்பட்ட சொற்கள் உள்ளன. இவ்வாறே சமஸ்கிருதத்திலும் வடஇந்திய மொழிகளிலும் உள்ளன.

| S ஒட்டு | எதிர்மறை ஒட்டு –இன் | எதிர்மறை – இல், இம் | எதிர்மறை – அன் |
|---|---|---|---|
| பேச்சு – S–peech | in efficency | il - literate | un - luck |
| வாள் – S- word | in visible | il - legal | un - pleasant |
| மெது – S-mooth | in nocent | il - legitimate | un - successful |
| தெரு – S-treet | in - vincible | im - moral, | un - avoidable |
| | | im - mortal | un - balanced |

இந்திய மொழிகளில், ஒட்டும் எதிர்மறை ஒட்டும் உண்டு.

| ஒட்டு | அன் – எதிர்மறை | அ – எதிர்மறை | அகரம் – ஹகரமாதல் |
|---|---|---|---|
| ப்+அத்தர் – பித்தர்–பிதா | அன் – இயன் | அ – கதி | அனுமன் – ஹனுமன் |
| ஸ்+தலம் – ஸ்தல | அன் – இயம் | அ – நாதை | ஆம் – ஹாம் |
| ஸ் – தானம் – ஸ்தான் | அன் – சாரி | அ – நாகரிகம் | (நம்) அம் – ஹமாரா |
| ஸ் – தூலம் – ஸ்தூல் | அன் – படா ஆத்மி | அ – சுத்தம் | ஆரம் – ஹார |

## 15. பிரளயவிதி

இயல்பாக உள்ள முறைகளை விட்டுப் பெருஞ்சிதைவு அடையும் சொற்களை இவ்விதிகளில் அடக்கலாம்.
எ.கா. பெரும் மகன் – பெருமான் – பிரான்
கண்ணபிரான், இராமபிரான்
பெரும் ஆட்டி – பிராட்டி

எம் பெரும் ஆட்டி – எம்பிராட்டி
தம் பெரும் ஆட்டி – தம்பிராட்டி
நம் பெரும் ஆட்டி – நம்பிராட்டி
வேளிர் மகள் – வேண்மகள் – வேண்மாள்

எம்பெருமகன் – எம்பிரான்
தம் பெருமகன் – தம்பிரான்
நம் பெருமகன் – நம்பிரான்
தொண்டை (நாட்டு) மகன் – தொண்டைமான்

மருவிய சொற்கள் – தமிழ் அல்ல போல் தோன்றினும் அவையாவும் தமிழ்ச் சொற்களே ஆகும்.

| சொற்கள் – சிந்தித்துப் பாருங்கள் – தமிழன் அருமை புரியும் | | | |
|---|---|---|---|
| சூரியன் | வேட்டி | பரதிசை | சித்திரம் |
| சந்திரன் | சீரை | ஆலாத்தி | சிற்பம் |
| நட்சத்திரம் | தவ்வைஅணி | தேவ – அத்தை | நடனம் |
| தாரகை | கடிகை ஆரம் | தெய்வம் | சங்கீதம் |
| நரகம் | மேவு (ய) மேகம் | மாரி – பாரிஷ் | அசுவம் |
| சு–வர்க்கம் | முகில் | சன்னல் | அலெக்சாந்தர் |
| தோசை | அரும்பு – ஆரம்ப | மாறுகடை | இசபெல்லா |
| இட்டளி | சாலை | பாசறை | சிக்கந்தர் |
| சமுத்திரம் | ஒடு, ஒடை | ஊர்து – உருது | எ–சபெத் |
| கடல் | சிந்து | மண்தலம் | விக்டோரியா |
| மலை | நறுமடை | பாவுஅடை | சந்திரலேக்கா |

குறிப்பு : ஆசிரியரின் மேற்படி கருத்துகளை மேலும் அலசி ஆய்ந்து பார்க்கவும், ஆய்வு அடிப்படையில் மறுப்பு கருத்துகள் இருந்தால் தெரிவிக்கவும் அன்புடன் வேண்டுகின்றோம்.

ஆசிரியர் சாத்தூர் சேகரனின்
அலைபேசி : 9894360806, 9442956769

**Postal Date : 1st and 2nd of every month Date of posting : 3rd of January 2011**
Egmore RMS Patrika Channel, Regd.with Registrar, News Paper of India
Registration Number of the Newspaper TNTAM / 2009 / 30866 Postal Registered No. TN / CCN / 513 / 10 - 12
T.C.No.T.N TAM 18701 THAMIZHAR SAMAYAM R.Dis No : 220 / 09

# 93-ஆம் முழு இரவுப் பிரார்த்தனை
## 14-01-2011




இந்தியா சாதி ஏற்றத்தாழ்வுக் கொள்கையின் பிடியி–ருந்து விடுதலையடைய, முழு இரவு பிரார்த்தனை ஒவ்வொரு 2 –ஆம் வெள்ளிக்கிழமையும் இரவு நம்முடைய தலைமை அலுவலகத்தில் நடைபெற்று வருகிறது,

கடவுள் நம் பிரார்த்தனைக்கு நல்ல பயன் தந்து வருவதற்காக நன்றி தெரிவித்தும் நம் சமுதாயம் சாதி ஏற்றத்தாழ்வுக் கொள்கையின் பிடியி–ருந்து விடுபட்டு அனைவரும் அன்புச் சகோதரர்களாக ஐக்கியமாய் வாழவும் 93 ஆம் முழு இரவு பிரார்த்தனை, 14–01–2011 அன்று உலகத் தமிழர் ஆன்மவியல் இயக்கப் பிரார்த்தனைக் கூடத்தில் (278, கொன்னூர் நெடுஞ்சாலை, அயன்புரம், சென்னை – 600 023. தொலைபேசி : 2674 0457 , 2674 3842) இறையருளால் நடைபெற உள்ளது.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**தமிழர் சமயம் இதழுக்கான சந்தா செலுத்தாதவர்கள் ஆண்டுச் சந்தா ரூ.100/- செலுத்தி இதழைத் தொடர்ந்து பெற்றுக் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.**

**Editor, Publisher, Printer** : Dr.M.Deivanayagam Ph.D.

**Sub Editors** : Dr. D. Devakala, Ph.D.
Mr. Seerkazhi Siva. Chandrasekaran

**Printer** : D. Devavaram, Meipporul Printers,
278, Konnur High Road,
Ayanpuram, Chennai - 600 023.
Phone :26741526

**Email** : **tamilarsamayam2010@gmail.com**

பெறுநர்

Owned and published by Dr. M.Deivanayagam, No.278, Konnur High Road, Ayanpuram, Chennai-600 023 and printed by D.Devavaram at Meipporal Achakam, No. 278, Konnur High Road.Ayanpuram, Chennai-600 023. **Editor**: Dr. M. Deivanayagam